தமிழ்ச்சிட்டு
குரல் : 1 இசை : 9
கரு 15 காசு
தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்
சி.எம்.இராசு.

உங்கள் மடல்கள்

○ உமி நீக்கி உள்ளிருக்கும் பொருளை எல்லாம்
உலகிற்கு வழங்கல் போல் தமிழின் சாற்றை
அமிழ்தாய் நீ வழங்குகின்றாய்; உன்றன் தொண்டில்
அயர்வின்றிப் பறந்தாட வாழ்த்துகின்றேன்!

— அரு. சுந்தரம்; இ.க., அடிகளார் உயர்பள்ளி,
பறம்பு(பிரான்)மலை.

○ தமிழ் மக்களின் உள்ளங்களையும், மாணவர்தம் உணர்வுகளையும் தட்டி எழுப்பி, தமிழ்க் குமுகாயத்தின் சீரழிவைத் தடுக்கும் ஏடுகளான தமிழ்ச்சிட்டும் தென்மொழியும் நன்கு செழிக்க இறைவனை இறைஞ்சுகின்றேன்.

— இறைவிழியன் (சாமிக்கண்ணு) பத்தாம் வகுப்பு.
நம்பியூர்.

○ தங்கள் இனிமையான தமிழைப் படித்தேன். தேன் சொட்டுகிறது. தாங்கள் வாழ்வாங்கு வாழ்ந்து அருந்தொண்டு செய்ய இறைவனை வேண்டுகின்றேன்.

— செ. உலகண்ணல், (லோகநாதன்), அச்சிறுபாக்கம்.

○ என்போன்ற சிறுமியரைத் தமிழ்ச்சிட்டு முற்றிலும் மாற்றி விட்டது. இனி என்போன்ற சிறுமியரும் தமிழ்ப் பற்றோடு தமிழ்த் தாய்க்குத் தொண்டு செய்வோம்.

— விசயத் திருமகள், ஆறாம் வகுப்பு, சோறப்பட்டு.

○ இக்கால மாணவர்கள் நல்ல வழியில் நடக்கவேண்டும்: இவ்வாறு அறிவுரை கூறத் தமிழ்ச்சிட்டும், தென்மொழியும் இருக்கும் போது கவலை என்ன? இனிய பொருளைக் காணும்பொழுது உண்ணவேண்டும் என்னும் ஆவல் எழுகிறது. அதுபோல் மாணவர்களுக்குத் தமிழ்ச்சிட்டு பயன்படுகிறது.

— மாணவர்கள்: பெ. வெற்றிவேந்தன், சங்கராபுரம்.
கி. சனார்த்தனன், அழகாபுரம்.

○ மங்காத் தமிழ்ச்சிட்டு மன்பதையில் வாழியென்று
சங்கே முழங்கிடுவாய் சற்று.

— க. கணேசன், பொறையாறு.

தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு !
இன்றைய சிறுவர் நாளைய உலகம் !
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை !
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல்–1 | தி. பி. ௧௯௯௮ சித்திரை (மேழம்) எப்பிரல் | இசை–9

‘தமிழன்’ என்றே சொல்லுங்கள் !

மக்கள் எல்லாரும் உடலாலும் உறுப்புகளாலும் ஒரே அமைப்பினர்தாம். உருவங்களில்தாம் குட்டையாகவும் நெட்டையாகவும் சிவப்பாகவும் கருப்பாகவும், பருமனாகவும் மெலிவாகவும் காணப்படுகின்றோமே அன்றி, பிறவகையில் எல்லாருடைய உடல்களும் ஒரே அமைப்புடையனவே. முயற்சியில்லாமையாலும், வாய்ப்பில்லாமை

பொறுப்பாசிரியர்:– பெருஞ்சித்திரன்
உறுப்பாசிரியர்–: இறைக்குருவன்.
தென்மொழி மின் அச்சகம், கடலூர்–1

யாலும் நம்மில் சிலர் அறிவில் மிகுந்தவராக இருக்கலாம். இவை எல்லா வேறுபாடுகளும் ஒரே இனத்தாருக்கே அன்றி, எல்லா இனத் தார்க்கும் பொதுவாகையால், இவற்றை வைத்துக்கொண்டு மக்க ளினத்தை நாம் பிரிக்க முடியாது.

இவ்வாறு இயற்கையிலேயே எவ்வகையான பாகுபாடும் இல்லா மல் பிறக்கும் மக்களை. நாம் செருக்காலும் அறியாமையாலும், பணத் தாலும், ஏமாற்றும் எண்ணத்தாலும் பல பிரிவுகளாகப் பிரித்து வைத் திருப்பது நம் குருட்டுத்தனமே ஆகும். நமக்குள் நாமே பல பிரிவு களாகப் பிரிந்துகொண்டு, ஒவ்வொரு பெயரைச் சூட்டிக்கொண்டு நமக்குள்ளேயே செயற்கையான இழிவு தாழ்வுகளைக் கற்பித் துக் கொள்கிறோம். நம்முள் ஒருவனைத் தாழ்ந்தவன், இழிபிறப் பாளன் என்கின்றோம்; ஒருவனை உயர்ந்தவன், உயர் பிறப்பாளன் என்று புளுகிக் கொள்கின்றோம்.

இப்படிப் பகுக்கப்பெற்று, நம் நாட்டில் உள்ள பிரிவுகள், குலங்கள், 'சாதி'கள் மிகப்பல. 'சாதி' என்ற சொல் தமிழ்ச்சொல் அன்று; எனவே 'சாதிப்' பகுப்பும் தமிழருடையது அன்று. தமிழர் குலம், இனம் என்ற பாகுபாடுகளே உடையவர். அவையும் தொழில், மொழிபற்றி அமைந்த பாகுபாடுகளே. நாகரிகமும் மனவளமும் அற்ற பிற இன மக்கள் தமிழகத்துள் வந்த பின்னரே, தமிழர்களின் தொழில் பாகுபாடு 'சாதி'ப் பாகுபாடு ஆயிற்று. அதை அக்காலத் தமிழர் ஒத்துக் கொள்ளாமல் தடுத்தனர். "இட்டார் பெரியோர்! இடாதார் இழிகுலத்தோர்" என்று விளக்கினர். "பிறப்பொக்கும் எல்லா உயிர்க் கும்" என்று உலகிற்கே அறம் கூறினர். "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்று கொள்கை முழங்கினர். ஆனால் அறிஞர்கள் செய்த முயற்சிகள் யாவும் நூல்களோடு நின்றன. பொதுமக்கள் அறி யாமையால் ஏமாறினர். 'சாதிப்' பிரிவுகளால் வந்த போலிப் பெருமைகளுக்கு மயங்கினர். 'சாதிப்' பிரிவுகளுக்குரிய 'சாதிக்' குறிக ளும் அணிகளும் அவர்களுக்கு நிறைவைக் கொடுத்தன. அவர்களின் அறியாமை வளர வளர 'சாதி'கள் இந் நாட்டில் வேரூன்றி விட்டன.

தம்பி, தங்கைகளே !

நாம் கற்றவர்கள் என்று பெருமையுடன் கூறிக் கொள்ளுகின்றோம் இல்லையா ? அப்படியானால் போலிப் பெருமை தரும், மக்கள் அறியாமையையே அடிப்பற்றி வளரும் 'சாதித்' தளைகளைக் கழற்றி எறியுங்கள். அந்தப் பொல்லாத பூசல் பேய்களை அறிவு வாளால் வெட்டி வீசுங்கள்.

உங்கள் பெயர்களுக்குப் பின்னால் 'சாதிப்' பட்டங்களை எந்தக் காரணம் கொண்டும் போட்டுக் கொள்ளாதீர்கள். அப்படிப் போட்டுக் கொள்பவர்களுக்கு உண்மைகளை எடுத்துச் சொல்லுங்கள். சொல்லியும் கேட்காதவர்களை விட்டு விலகுங்கள். 'சாதிப்' பூசல்களால் பெருமை பேசித்திரியும் வீணர்களையும் பேயர்களையும் காறி உமிழுங்கள். இத்தகையசெயல்களால் வரும் தொல்லைகளையும் துயரங்களையும் ஒரு மறவனைப்போல் தாங்கிக் கொள்ளுங்கள்.

உங்களை 'யார்' என்று கேட்கும் இடங்களிலும், கேட்பவரிடமும் 'நான் ஒரு தமிழன்' என்று உரக்கக் கூறுங்கள். மொழியின் பெயரால் இனத்தைக் கூறுவதே அறிவுக்குப் பொருந்தும் செயல். நாடும் மொழியின் பெயரால்தான் அழைக்கப்படும். உருசிய மொழி பேசுபவர் உருசியர்; அவர் வாழும் நாடு உருசியா. ஆங்கில மொழி பேசுபவர் ஆங்கிலேயர்; அவர் வாழும் நாடு இங்கிலாந்து; சீன மொழி பேசுபவர் சீனர் ; அவர் வாழும் நாடு சீனம்.அப்படியே நாம் பேசும் மொழி தமிழ்; நம் நாடு தமிழ்நாடு; நாமும் தமிழரே! இக் கொள்கைக்கு மாறாக நடப்பவர் தமிழர் ஆகார். O

உங்களுக்கொரு பரிசு!

தம்பி தங்கைகளே! நீங்கள் ஒவ்வொருவரும் தமிழ்ச்சிட்டுக்கு ஐந்து மாணவர்களை உறுப்பினராக்கினால் உங்கள் பெயருக்கு ஓராண்டிற்குத் 'தமிழ்ச்சிட்டு' இலவசமாக அனுப்பப்படும். ஒருமாதத்திற்கே இச் சலுகை. எங்கே! இன்றே ஐந்து உறுப்பினர் தொகை உருபா பத்தையும் ஆறு முகவரிகளையும் அனுப்பி வைத்து இலவசமாகத் தமிழ்ச் சிட்டைப் படியுங்கள்.

அமைச்சர், தமிழ்ச்சிட்டு, கடலூர் 1.

உலகம் சுற்றுவோம்

தமிழக அரசு

இந்த மாதம் 14-ஆம் பக்கல்(தேதி)முதல் சென்னை அரசுக்குத் 'தமிழக அரசு' என்று பெயரிடப்படும்- என்று சென்னை அமைச்சர் அவை தெரிவித்துள்ளது.

எந்த மொழியிலும் பேசலாம்.

தில்லி பாராளு மன்றத்தில் உறுப்பினர்கள் ஆங்கிலம், இந்தி மொழிகளிலேயே தங்கள் கருத்துகளை வெளியிட்டு வந்தனர். வேறு மொழிகளில் பேசுவதானால் அவற்றின் ஆங்கில மொழி பெயர்ப்புகளை முன்னதாகவே கொடுத்துவிட வேண்டும் என்ற முறை இதுவரையில் இருந்தது. ஆனால் இனிமேல் அவ்வகை முன்னறிவிப்பின்றி உறுப்பினர்கள் பதினான்கு தேசிய மொழிகளிலும் தங்கள் கருத்துகளை அறிவிக்கலாம் என்று அவை தீர்மானித்துள்ளது.

சீனு பிடித்த நிலப்பரப்பு.

இந்தியப் பகுதியில் ஏறத்தாழ 14,500 சதுரக் கற்கள் பரப்புள்ள நிலத்தைச் சீனஅரசு கைப்பற்றியுள்ளதாக வெளி வட்டாரத் தொடர்பு அமைச்சர் அறிவித்துள்ளார்.

பால் பாழ்.

அமெரிக்காவில் பாலின் விலையை அரசினர் குறைத்ததைக் கண்டித்து அங்குள்ள பால்விற்பனையாளர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா? குடம் குடமான பசும்பாலைச் சாய்க்கடையில் ஊற்றினர். கொப்பரை நிறைய பாலை ஊற்றி அதில் குளித்து முழுகினர். இப்படி வீணடிக்கப்படும் பால் நாள் ஒன்றுக்கு ஏறத்தாழ 10 இலக்கம் குடுவை(-காலன்) களாம். அமெரிக்க பால்காரர்களின் அறியாமையை என்னென்று சொல்வது?

சேம்சு ஆலன்

அ. பொன்னுச்சாமி — புலிகரம்பலூர்.

ஆங்கில நாட்டில் மெய்யுணர்வாளர் ஒருவர் வாழ்ந்தார்; மெய்யுணர் வெழுப்பும் நூல்கள் பல யாத்தார்; வள்ளுவர் நெறிகளுக்கு விளக்கம் என்று எண்ணும் வண்ணம் நூல்கள் அமைத்தார் என்றால் உங்களுக்கு வியப்பாகத் தோன்றுகிறதன்றோ?

அவர் யார் தெரியுமா? அவர்தான் சேம்சு ஆலன். அவர் 1864-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 28-ஆம் நாள் இங்கிலாந்து நாட்டில் இலீசுடர் நகரில் பிறந்தார். இளமையிலேயே ஆலன் கல்வியில் அவாவுடையவராக இருந்தார். அவர் உயிர் பற்றிய அறிவு வினாக்களைத் தம் தந்தையே வியக்கும் நிலையில் எழுப்பி, அவர் புரியாமல் விழிக்கும் நிலையில் விளக்கிச் சொல்லுவாராம். அவர் தந்தை ஆலனின் கூரிய அறிவை வியந்து, ''மகனே! நீ ஒரு பிறப்பில் கற்ற கல்வியன்று இது. முன்பிறவிகளில் எல்லாம் நன்றாகக் கற்றிருக்கிறாய் போலும்'' என்று கூறுவாராம்.

ஆலன் இளமையில் உடல் வலிவற்றவராக இருந்தார். ஆயினும் மிகுதியான செய்திகளை ஆய்ந்த வண்ணமும், உணர்ந்த வண்ணமுமே இருப்பார். இதைக் கண்ட தந்தையும் பிறரும், ''தம்பி! உடல் வலிவற்ற நீ உள்ளத்திற்கு வேலை கொடுப்பின் விரைவில் இறப்பாய்'' என்று கூறுவார்களாம்.

ஆலன் ஒழுங்காகக் காலாகாலத்தில் கடமைகளைச் செய்வதில் வல்லவர். அவர் எதையும் அரைகுறையாக எண்ணுவதோ செய்வதோ கிடையாது. இதற்குக் காரணம் அவரது உள ஒருமைப்பாடேயாம்.

இதனால்தான் அவர் உயர்வடைந்தார். இயற்கை இன்பத்தில் தம்மை மறந்து விடுவார்; உயிர்களிடத்து அளவற்ற அன்பு கொண்டவர்.

அவரது 15-ஆவது அகவையில் அவரின் தந்தை தம்முடைய செல்வத்தையெல்லாம் இழந்தார். அதனால் குடும்பக் காப்புக்குச் செல்வம் திரட்ட அமெரிக்கா சென்றார். சென்ற இரு நாட்களுக்குள் தமது செல்வமாக ஒரு வெள்ளிக் கைக்கடிகையாரத்தை மட்டும் விட்டு விட்டு நியூயார்க் நகரத்தில் உயிர் துறந்தார்.

இப்போது ஆலன் தமது தாயாரையும் உடன்பிறந்தாரையும் காப்பாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. நாள்தோறும் பதினைந்து மணி நேரம் உடலுழைத்தார்; படிப்பையும் விட்டாரல்லர். அப்போதும் மூன்று நான்கு மணிநேரம் நூல்களைப்படிப்பார். "மிகுதியும் துன்பப்பட்டு வேலை செய்தல் பல மொழிகளைக் கற்பதோடொக்கும்" என்று அடிக்கடி கூறுவார்.

ஆங்கில நாடகாசிரியர் சேக்சுபியரின் நாடகங்களைத் தமது 17-ஆவது அகவையில் கற்கத் தொடங்கிப் பெரும் பகுதிகளை மனப்பாடம் செய்தார். அக்காலத்திலும் எக்காலத்திலும் அவர்தம் நோக்கம் மெய்யுணர்தல் ஒன்றே. அவர் அதற்காகவே பல நூல்களைக் கற்றார்.

அவர் ஒழுக்கத்தை உயிரினும் மேலாகக் கருதினார். ஆங்கில இனத்தவராயிருந்தும் புலாலுண்ணல், கள்ளுண்ணல், அயற்பெண்களோடு உலாவச் செல்லல் போன்ற பழக்கங்களை ஒருபோதும் கைக்கொண்டாரல்லர்.

ஆலனின் வாய்ச்சொற்கள் பொருள் நிறைந்தனவாகவும் இன்பம் நல்குவனவாகவும் இருக்கும். அவரைக் கண்ட தீயோரும் நல்லோராக மாறிவிடுவர். இதற்குச் சான்று: ஒருகாலத்தில் தொழிற்சாலையொன்றில் வேலை செய்தவர்கள் அனைவரும் கெட்ட சொற்களையே பேசுபவர்களாக இருந்தார்கள். அங்கு நமது ஆலன் அவர்கள் போய்ச் சேர்ந்ததும் அவர்கள் அனைவரும் அக் கெட்ட சொற்களை அடியோடு நிறுத்திவிட்டனர்.

ஆலன் 24-ஆவது அகவையில் "ஆசிய விளக்கு" (Light of Asia) என்னும் நூலைப் படித்து மெய்யுணர்வைப் பெற்றார். அது முதற்கொண்டு நம் நாட்டு நூற்களை மிகுதியும் கற்கத் தொடங்கினார். அவர் நம்நாட்டு நூற்களில் அளவுகடந்த பற்றும் நம்பிக்கையும் உடையவர். அவர் அடிக்கடி, "கீழை நாட்டாரை உண்மையறிவின்

களஞ்சியம்'' என்று கூறுவார். அவர் சொல் ஒவ்வொன்றிலும் நம் நாட்டு அறமும் கோட்பாடும் மிளிரும்.

''ஒழுக்கம் ஒன்றே மெய்யுணர்விற்கும் மற்றைய அனைத்து உயர்ந்த பதவிகளுக்கும் இலக்கு;' என்பதே அவர் கொள்கை.

ஆலன் தமது 30-ஆவது அகவையில் இலில்லி என்ற ஓர் ஆங்கில மங்கையை மணந்தார். அவ்வம்மையார் ஓர் ஒப்பற்ற துணையாக அவருக்கு விளங்கினர். ஈராண்டில் ஒரு பெண் குழவியை ஈன்றார். அக்குழந்தைக்கு நோரா என்று பெயரிட்டனர். இப்பெண் குழந்தை ஒன்றே அவர்தம் அன்புக்கும் பண்புக்கும் உரிய நிலையில் வளர்க்கப்பட்டது.

ஆலன் படுக்கையிலிருந்து காலை 3 மணிக்கு எழுவார். உடனே இறைவழிபாட்டில் அமர்வார். பின் குன்றுகளில் குந்திப் புலம்பன் (ஆன்ம) விளக்கங்களை எண்ணுவார். பிறகு தம்மைக் காண வருவார்க்குக் கனிவுரை வழங்குவார்.

''மாந்தனது புற நிலைமைகளெல்லாம் அவனது அக நிலைமைகளிலிருந்து வெளிப்படுகின்றன; புறநிலைமைகளைத் திருத்துதற்கு அக நிலைமைகளைத் திருத்தல் வேண்டும்'' என்பதே அவரது சிறந்த அறிவுரையாகும்.

அவர் மெய்யறிவை உலகில் நிலைநாட்டற் பொருட்டு ''அறிவு விளக்கம்'' (The light of reason) என்ற ஒரு திங்கள் தாளிகையை நடத்தி வந்தார்: அதையே பிற்காலத்தில் அவரது இல்லத்தரசி ''புதிய காலத் தொடக்கம்'' (The Epoch) என்னும் பெயரில் திங்களிதழாக நடத்தினர்.

ஆலன் உடல்நலங் குறைந்த காலத்தும் தமது அன்றாடக் கடமைகளில் ஒன்றிரண்டைக் கூடக் குறைத்துக் கொள்ள விரும்பவில்லை. உற்றார், மனைவி, மகள் எல்லாரும் இவரைத் தம் கடமைகளைக் குறைக்க வேண்டும் என்று வேண்டியபோதெல்லாம் ''வேலை செய்வதற்காகவே யான் உடலோடு கூடிப் பிறந்தேன்; வேலை செய்வதற்காகவே உடலோடு கூடி வாழ்கிறேன்; என் வேலை முடிந்தவுடனே இவ்வுடலை யான் விட்டு விடுவேன்; நீங்கள் என் வேலையைத் தடுக்க வேண்டா'' என்று கூறியிருக்கின்றார். அவர் 1912-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 24-ஆம் நாள் இவ்வுலக வாழ்வை நீத்தார்

ஆலன் உடல் நம்மை விட்டுப் பிரிந்தாலும், அவரால் இயற்றப்பட்டுள்ள பல மெய்யறிவு நூல்கள் இவ்வுலகில் என்றென்றும் நின்று

நிலவும்படியும் அவரது அறிவையும் ஆற்றலையும் சொல் வன்மையையும் புகழும்படியும் உள்ளன.

அன்புத் தம்பி தங்கைகளே! நீங்களும் அவர் போல உண்மை வாழ்வை உணரவேண்டாவா? உணர்ந்தபடி நடக்க வேண்டாவா? அவரால் இயற்றப்பட்டுள்ள நூல்களைப் படித்தொழுக வேண்டாவா? அவருடைய மெய்யான வாழ்க்கையையும் மேலான ஒழுக்கங்களையும் கைக்கொள்ளுங்கள்; வாழ்வமைக்க முயலுங்கள்.

ஒழுக்கமும் உண்மையும் ஓங்குக !
மெய்யுணர்வு தோன்றுவதாக !!

‘சிறந்த மொழி எது’

ஆங்கிலம், தேவநாகரி, பார்சி, சீனம், சப்பானியம், வங்காளம், குசராத்தி, தெலுங்கு, கன்னடம், மலையாளம், தமிழ்...... இவை முறையாக எழுதப்படுகின்றன. இவற்றுள் சீனமும் சப்பானியமும் சொல்லுக்கொரு எழுத்துடையன. பார்சி எழுத்துகள் சிக்கனமானவை; ஆனால் கூட்டெழுத்துகள்; படிப்பது சிறிது கடினம். தேவநாகரி முதலிய எல்லா இந்திய வரிகளும் கூட்டெழுத்துள்ளவை.

ஆங்கிலம் தமிழ் இரண்டுமே கூட்டெழுத்தில்லாதவை. ஆங்கிலம் 26 எழுத்துகளில் உலகை வளைத்துத் தன்னுள் அடக்குகிறது. ஆனால், உயிர்மெய் இல்லாததால், அதில் ஒலிப்பதைவிட அதிக எழுத்துகள் சேர்க்க வேண்டியிருக்கின்றன. பலுக்குவது (உச்சரிப்பது) கடினம். “லைட் (Light) என்பதற்கு ஐந்து எழுத்துகள் வேண்டும். ‘தாட்’ (Thought) என்ற இரண்டெழுத்துச் சொல்லுக்கு ஏழு ஆங்கில எழுத்துகள் வேண்டும்.

வங்காளி ‘லட்சுமி’ என்றெழுதி ‘லொக்கி’ என்று சொல்வான். தமிழை எழுதுகிறபடியே படிக்கலாம், படிக்கிறபடியே எழுதலாம். கூட்டெழுத்தில்லை. முப்பதே எழுத்தில் உலக மொழிகளை யெல்லாம் எழுத வகையுண்டு. உலக எழுத்துகளில் நிறைவானதும், சிக்கலில்லாததும், ஹா, ஹூ என்று மூச்சை விழுக்காததும் தமிழே. தமிழ் இலக்கணமும் மிகத் தெளிவானதே. எழுத்து சொல், தொடர் அகப்பொருள், புறப் பொருள், பா, அணி ஆகியவற்றை இலக்கணம் விளக்கும்.

அனுப்பியவர்: பாவநாசம் வி. ப. க. மூர்த்தி.
அடிப்படை : “இனிய தமிழ் இலக்கணம்”

சிற்றெறும்பு

-துரை மாணிக்கம்.

பையன்: சிற்றெறும்பே! சிற்றெறும்பே!
செல்வதெங்கே சொல்லுவாய் ?

சிற்றெறும்பு : புற்றை நோக்கிப் போகிறோம் ;
பொழுது விழப் போவதால் !

பையன் : பற்றிக்கொண்டு செல்வதென்ன ?
பாடுபட்ட செல்வமோ ?

சிற்றெறும்பு : குற்றி வைத்த அரிசி மாவின்
குறுநொய் கொஞ்சம் கிடைத்ததே !

பையன் : கூட்டி வைக்கும் செல்வம் யாவும்
கொட்டிக் காப்ப தெங்கேயோ ?

சிற்றெறும்பு : வீட்டை யொன்று கட்டி வைத்து
வேலி போட்ட புற்றிலே !

பையன் : மேட்டின் மீது புற்றை நீங்கள்
கட்டி வைத்த தென்னவோ ?

சிற்றெறும்பு - ஈட்டி வைத்த கூலம் யாவும்
ஈரஞ் சேரா திருக்கவே !

பையன் - ஒன்று பின்னே ஒன்றுய்ப் போகும்
ஒழுக்கம் கற்ற தெங்ஙனம் ?

சிற்றெறும்பு : நன்று கேட்டாய் ! எவ்வுயிர்க்கும்
நல்லொழுங்கே வாழ்க்கையாம் !

பையன் : குன்று போலக் குவித்த செல்வம்
கூடி யுண்ப தெங்ஙனம் ?

சிற்றெறும்பு: ஒன்று வாழ்வு ! யாவும் வாழ
உண்டு செல்வம் உலகிலே !

பையன்: சேர்ந்து யாவும் கூடியுண்டால்,
செல்வம் தீர்ந்து போகுமே?

சிற்றெறும்பு: தீர்ந்து போகில் யாவுங் கூடி
ஊர்ந்து சென்று சேர்ப்பமே!

பையன்: கூர்ந்து சொல்வாய்! உங்கள் வாழ்வில்
குத்துச் சண்டை தோன்றுமோ?

சிற்றெறும்பு: நேர்ந்ததில்லை! நேர்வதில்லை!!
நாங்கள் எல்லாம் ஓரினம்?

(பாடல் 8 ஆண்டுகட்கு முன் தென்மொழியில் வெளியிடப் பெற்றது. 'தமிழ்ச்சிட்டு'த் தம்பி தங்கைகளுக்காக மீண்டும் வெளியிடுகின்றோம்.)

தம்பிக்கு

கா. செகதீசன், உமராபாது.

கிழக்கு வானம் வெளுக்குது;
உலகில் யாவும் விழிக்குது;
பறவைக் கூட்டம் பறக்குது;
கக்கா கிக்கீ குக்கூக் கே;

தம்பி தம்பி எழுந்திரு;
தமிழைப் படிக்க விழித்திடு;
காலைப் படிப்பு கருத்திலே
கல்லில் எழுத்துப் போலவே!

முகத்தை நீரில் கழுவடா;
முதுகை வளைத்து நிமிர்த்தடா;
கையைக் காலை உயர்த்தடா;
களிப்பை நெஞ்சில் தேக்கடா!

வள்ளுவன் செய் குறளடா,
வாய் மணக்கப் படியடா!
தெள்ளு தமிழில் பாடலைத்
தேன் குரலில் பாடடா!

விண்ணை அளக்கும் அறிவியல்,
விளங்க வைக்கும் புவியியல்,
கண்ணைப் போன்ற கணக்கியல்,
கடந்த கால வாழ்வியல்!

இளமைப் போழ்து கல்விதான்
இருண்ட வீட்டு விளக்கடா!
உணர்வை நெஞ்சில் தேக்கடா;
ஊக்கம் கொண்டு படியடா?

'கடக்' 'கடக்' தவளையாரே.........!

— தமிழாலயன்.

'கடக், கடக்' தவளையாரே !
கொட்டும் மழை எப்போது ?
'படக், படக்' மின்னல் வெட்டி
மேளங்கொட்டும் அப்போதோ ?
'கொக், கொக்' கொக்குகளே !
கோணல்கழுத்து நாரைகளே !
'பக், பக்' புறாக்களுக்கே
பரிசம்போட வந்தீரோ ?
'கா, கா' காக்கைகளே !
காக்கச் சொல்லும் காக்கைகளே ;
'கூ, கூ' குயில்களுக்குக்
கூடுகட்டிக் காப்பீரோ ?
குளத்துநீரில் படகுபோலும் !
தவளை, மீனை விழுங்கவே,
'குவா, குவா' வாத்துகளே –
தவழுகின்ற பயணமோ ?

அண்ணன் தந்த பொத்தகம்

(இரா. உதியன்; புதுவை-7)

அண்ணன் தந்த பொத்தகம் !
அழகு மிக்க பொத்தகம் !
கண்ணைக் கவரும் ஓவியம் !
கவலை போக்கும் பாவியம் !

உண்மையான வற்றையே,
உரைக்கும் அந்தப் பொத்தகம்.
நன்மையான வற்றையே,
நயமாய்க் கூறும் பொத்தகம்.

நாட்டுப் பற்றை ஊட்டிடும் !
நல்ல நெறியைக் காட்டிடும் !
கூட்டுச் சேர்ந்து வாழ்ந்திடின்
குவியும் செல்வம் என்றிடும் !

அன்பே அல்லல் போக்கிடும் ;
அறிவு சேர்க்கும் நூலையே
நண்ப னாகக் கொள்வனே
நல்ல மாந்தன் ஆவனே !

'திரு'வை மறவாதீர் !

ச. பன்னீர்ச்செல்வன்

ஆங்கில மொழியில் ஒருவர் பெயருக்கு முன் அவர் ஆண்பாலராயின் Mr. என்றும், பெண்பாலராயின் Miss (மணமாகாதவர்) Mrs. (மணமானவர்) என்றும் குறிப்பிடுவது வழக்கம். இதைப்போலவே சமற்கிருத (வட) மொழிக்காரரும் 'ஸ்ரீ' 'ஸ்ரீமான்' 'ஸ்ரீமதி' போன்ற சொற்களை அவர்தம் மொழியின் எழுத்துகளில் எழுதிக்கொள்வர்.

நாமும் நம் அன்னை மொழியாகிய தமிழில், மாந்தர்தம் பெயர்களின் முன்னே திரு, திருவாட்டி என்பன போல் குறிப்பிடுவது மரபு. ஆனால், இக்காலத்தில் வடமொழிக்காரர்களில் தமிழ்நாட்டில்வாழ்வோர் தமிழ் மரபை அறிந்திருந்தும், தம் தாய்மொழிப் பற்றினால் தமிழ் மொழியில் எழுதும்போது 'திரு' முதலிய தமிழ்ச்சொற்களை எழுதாமல் 'ஸ்ரீ' முதலான வடசொற்களை எழுதுகின்றனர். இது பிழை என்று மாணவக் குழந்தைகளாகிய உங்களுக்குத் தெரிந்திருக்கக் கூடும். ஆனால், அறியாமையில் உழலும் பெரும்பான்மைத் தமிழ்ப் பொது மக்கள் வடமொழிப் பற்றுளர்களைப் போலவே, தாம் செய்வது பிழை-தமிழைக் குலைக்கும் பேதைமை என்பதை உணராமல், 'ஸ்ரீ', 'ஸ்ரீமதி' களைப் பயன்படுத்துகின்றனர்.

இக்கெடுநிலை நீடிக்குமேயானால் இன்னும் சிலவாண்டுகளில் மக்கள் பெயருக்கு முன் எழுதுவதற்கான சிறப்புச் சொற்களே தமிழில் இல்லை எனக் கூறிவிடுவரோ என்ற அச்சம் ஏற்படுகின்றது.

இருப்பினும் தமிழ்ப்பற்று மிக்க இளைஞர்களாகிய நீங்கள், வருங்காலத்தில் தமிழைப் பேணப் போகின்றவர்களாதலின், தமிழில் கலந்துள்ள கசடுகளைக் களைந்து, சீர்மலியச் செய்வீர்கள் என்ற நம்பிக்கையில் கீழ்வரும் சொற்களைப் பயன்படுத்துமாறு அன்புடன் கோருகின்றேன்.

(அ) மாற்றுச் சொற்கள்:

ஸ்ரீ (Mr.) — திரு.
ஸ்ரீமான் (Mr.) — திருவாளர், செல்வன், (இளைஞர்).
ஸ்ரீமதி (Mrs.) — திருவாட்டி.
குமாரி (Miss.) செல்வி, நங்கை.
ஸ்ரீ-ல-ஸ்ரீ (Rev.) — மறைத்திரு, திருப்பெருந்திரு.

(ஆ) ஆண், பெண் இருபாலவர்க்கும் ஏற்ற தமிழ்ச் சொற்கள்:- திருமலி, திருசெறி, திருவோங்கு, திருமலர், திருவளர். திருசுடர்.

(இ) மேலும் சில சிறப்புச் சொற்கள்:—

சான்றோர் பெயர் முன்—உயர்திரு.
நட்பினர் பெயர் முன் — அன்புத்திரு.
கலைஞர் பெயர் முன் — கலைத்திரு.
தமிழன்பர் பெயர் முன் — தமிழ்த்திரு.
மருத்துவர் பெயர் முன் — மருத்துவத்திரு, பண்டுவத்திரு.
இசையறிஞர் பெயர் முன் — இசைத்திரு.

இன்ப வுலகமா? பாழ் உலகமா?

:O:

ஒருகால் அமெரிக்காவில் சட்டமன்றத்திற்குத் தேர்தல் நடந்தது. அத்தேர்தலில் ஆபிரகாம் இலிங்கன் ஒரு வேட்பாளராக நின்றார். அவரை எதிர்த்துக் கிறித்துவ சமயகுரவர் (பாதிரி) ஒருவர் போட்டியிட்டார். இருவரும் தம்தம் நோக்கங்களையும் கொள்கைகளையும் பல கூட்டங்களில் எடுத்துக்கூறி மக்களிடம் ஒப்போலைகள் கேட்டனர்.

சமயப் பெரியார் ஒருநாள் பெரியதொரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தார். அக் கூட்டத்திற்கு ஆபிரகாம் இலிங்கனும் வந்து முன்புற வரிசையில் அமர்ந்துகொண்டு, அவர் பேசிய பேச்சைக் கேட்டார். அப்பொழுது சமயத் தந்தை ''மக்களே! எனக்கு ஒப்போலை இட்டால் நீங்கள் இறைவனின் இன்பவுலகம் (மோட்சம்) செல்வீர்கள். ஆனால் ஆபிரகாம் இலிங்கனுக்கு ஒப்போலையிட்டால் பேய்வாழும் பாழ்உலகிற்கே (நரகம்) போவீர்கள்? எங்கே எனக்குப் போட விரும்புகிறவர்கள் கைகளைத் தூக்குங்கள் பார்க்கலாம்'' என்றார். உடனே கூட்டத்திலிருந்தவர்களில் ஆபிரகாம் இலிங்கனைத் தவிர எல்லாரும் கைகளைத் தூக்கினர். அதைக்கண்ட அச்சமய குரவர் இலிங்கனைப் பார்த்து, ''ஆபிரகாம் இலிங்கன்! நீங்கள் எங்கே போக விரும்புகின்றீர்கள்? என்று கேட்டார். இலிங்கன் உடனே, ''நான் சட்டமன்றத்திற்குப் போக விரும்புகின்றேன்'' என்றார். சமயத் தந்தையின் முகம் சுருங்கிப் போயிற்று.!

— மா. பூங்குன்றன்.

ஒரு முழுநாளின் கணிக்கை.

தமிழர் ஒரு முழுநாள் என்ற தம் காலவரையை நண்பகலிலிருந்து மறுநாள் நண்பகல் வரை என்று கணித்துள்ளனர். இதனால் கடைக் கழகக்கால வழக்கில் நள்ளிரவு 'நடுநாள்யாமம்' என்று வழங்கப்படுகிறது.

ஒரு முழுநாள் கால வரையை ஆரியர் விடியலிலிருந்து விடியல் வரை என்றும், இசுலாமியர் பொழுதடைவிலிருந்து பொழுதடைவு வரை என்றும், தற்கால மேலையுலக மக்கள் நள்ளிரவிலிருந்து நள்ளிரவு வரை என்றும் வெவ்வேறாகக் கணக்கிட்டுள்ளனர்.

— கு. சுவாமிநாதன், பெங்களூர்-3.

எங்கள் பெயர்களைத் தூய தமிழ்ப் பெயர்களாக

மாற்றிக் கொண்டோம்.

—:O:—

('தமிழ்ச்சிட்டு' கேட்டுக்கொண்டபடி தமிழ்த்தம்பி தங்கைகள் பலரும் தங்கள் தங்கள் பிறமொழிப் பெயர்களைத் தூய தமிழ்ப் பெயர்களாக மாற்றிக் கொண்டதாக, அறிவித்திருக்கின்றார்கள். அவர்களின் பெயர்களைத் 'தமிழ்ச்சிட்டு' தொடர்ந்து இப்பக்கத்தில் பாடிக் காட்டும். அன்பும், அறமும், கல்வியும், வளமும் நிரம்பிய நல்ல குடிமக்களாகவும் தொண்டர்களாகவும் இனி வருங்காலத்தில் வளர்ந்து சிறக்கும்படி 'தமிழ்ச்சிட்டு' அவர்களை வாழ்த்துகின்றது. இடமின்மையால் அவர்களின் முழு முகவரிகளையும் தரமுடியாமைக்கு வருந்துகின்றோம்.

— ஆசிரியர்.

விராலிமலை ஒன்றியத் தொடக்கப்பள்ளி, வாணத்திரையன்பட்டி ஆசிரியர்களும், மாணவர்களும். பெயர் மாற்றத்திற்கு உதவியாய் இருந்தவர்கள்: திரு. உணர்வுப்பித்தன்; ஞான. அருள்வேட்டன் (ஞான பால்ராசு - ஆசிரியர்) நெடுஞ்செழியன் (நாராயணசாமி - ஆசிரியர்) விராலிமலை.

எண்:	முன்னைய பெயர்	மாற்றிய பெயர்
17	ஞான. பால்ராசு	ஞான. அருள்வேட்டன்.
18	நாராயணசாமி	நெடுஞ்செழியன்.
19	கே. ஆறுமுகம்	தமிழ்வென்றி.
20	கே. முருகேசன்	நாகிளநம்பி.
21	எம். பழனியாண்டி	எழில்வேலன்.
22	கே. மாரிக்கண்ணு	மணிமேகலை.
23	எம். கண்ணம்மாள்	கயல்விழி.
24	ஆர். பிச்சை	பனம்பாரன்.
25	ஏ. ஏழுமலை	செருவென்றான்.
26	பி. பெரியசாமி	தொடித்தோட்செம்பியன்.
27	எசு. மலையன்	திருமுடிக்காரி.
28	கே. மணி	அறிவொளி.
29	எசு. முத்தன்	வடிவழகன்.
30	கே. சுப்பிரமணியன்	குன்றக்குமரன்
31	பி. கண்ணப்பன்	தொண்டகத்தான்.

32	கே. சாரதா	வேண்மாள்.
33	எசு. ஆராயி	கோப்பெருந்தேவி .
34	எம். இராமசாமி	அழகண்ணல்.
35	கே. கண்ணன்	முகில்வண்ணன்.
36	எம். மணி	செங்கதிர்.
37	கே. சின்னத்துரை	இளவழுதி.
38	எசு. இராமசாமி	மறவேங்கை.
39	கே. கருப்பன்	நக்கீரன்.
40	கே. சின்னக்கண்ணு	சீராளன்.
41	ஏ. வெங்கடாசலபதி	மறைமலை
42	இராசு	வேங்கைமார்பன்.
43	சீவானந்தம்	பூங்குன்றன்.
44	சின்னத்துரை	தமிழநம்பி.
45	தங்கராசு	இரும்பொறை.
46	கே. மூக்கன்	இடைக்காடன்.
47	பி. கணேசன்	வேழவேந்தன்.
48	வெள்ளைச்சாமி	கடுவெளிச்சித்தன்.
49	மாணிக்கம்	ஒளிர்மணி.
50	சுப்பன்	செங்குட்டுவன்.
51	இராசு	இளவரசு.
52	பிச்சை	தாளாளன்.
53	கருப்பையா	மாலிறையன்-
54	நல்லு	நல்வேட்டன்.
55	கருப்பன்	முகில்வண்ணன்.
56	சின்னச்சாமி	இளஞ்சித்திரன்.
57	மோழையன்	சேட்சென்னி
58	அய்யாசாமி	சித்தையன்.
59	சேம்சு	எழில்மாறன்.
60	பொன்னுச்சாமி	இளம்பரிதி.
61	முத்து	வலம்புரி.
62	கருப்பன்	தமிழ்த்தும்பி.
63	சிதம்பரம்	மன்றவாணன்.
64	சின்னத்துரை	இளங்கதிர்.
65	சுப்பிரமணி	தூயமணி.
66	இராசன்	நெடுமாறன்.
67	செல்லம்	அருள்நங்கை.
68	செவத்தி	சீரிளவல்லி.
69	இராமாயி	எழில்நாச்சி.
70	பாக்கியம்	வாழ்வரசி.
71	பாப்பு	இளவெயினி.
72	திருப்பதி	எழில்வஞ்சி.

(வளரும்)

0 சென்ற மாதப் புதிர் 1-இன் விடை:

முதலில் பத்து பதினம்(லிட்டர்) குடத்திலிருந்து மூன்று பதினக் குடத்தால், மூன்று முறை எடுத்து, 7 பதினக் குடத்தில் விட்டால் இரண்டு பதின எண்ணெய் மிகுந்து போகும். இப்பொழுது 7 பதினக் குடம் நிறைய எண்ணெயும், 3 பதினக் குடத்தில் 2 பதின எண்ணெயும், 10 பதினக் குடத்தில் 2 பதின எண்ணெயும். 10 பதினக் குடத்தில் 1 பதின எண்ணெயும் இருக்கும். பிறகு 7 பதினக் குட எண்ணெயை 10 பதினக் குடத்தில் ஊற்ற வேண்டும். இப்பொழுது 10 பதினக் குடத்தில் 8 பதின எண்ணெய் இருக்கும். பின் 3 பதினக் குடத்தில் உள்ள 2 பதின எண்ணெயை 7 பதினக் குடத்தில் ஊற்றிவிட்டு, 10 பதினக் குடத்தில் உள்ள எண்ணெயில் 3 பதின எண்ணெயை மொண்டு 7 பதினக் குடத்தில் ஊற்றினால், அதில் உள்ள எண்ணெய் 5 பதினம் ஆகின்றது. 10 பதினக் குடத்திலும் 5 பதின எண்ணெய் இருக்கும்.

0 புதிர் 2-இன் விடை:—

படையில் இருந்த மறவர்கள் 630 பேர். அவர்கள் முதல் கோட்டையில் வாயிலுக்கு 210 பேர்களாகவும், 2-ஆம் கோட்டையில் வாயிலுக்கு 126 பேர்களாகவும், 3-ஆம் கோட்டையில் வாயிலுக்கு 90 பேர்களாகவும், 4-ஆம் கோட்டையில் வாயிலுக்கு 70 பேர்களாகவும், 5-ஆம் கோட்டையில் வாயிலுக்கு 63 பேர்களாகவும் பிரிந்து சென்றனர்.

ஒரு விளக்கம். இப்பகுதியில் வரும் புதிர்களுக்குச் சிலர் விடைகளை எழுதியனுப்புகின்றனர். அவ்வாறு விடையனுப்பத் தேவையில்லை. விடைகளைத் தாங்களாவே எழுதி வைத்திருந்து வருகின்ற விடைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளுங்கள். இன்னொன்று. இப்பகுதிக்கு விடுக்கும் புதிர்கள் தாங்களாகவே போட்டவையாக இருத்தல்வேண்டும். வேறு நூல்களில் வெளிவந்த புதிர்களாக இருத்தல் கூடாது. வேண்டுமானால் அவை போல இருக்கலாம். ஆனால் அமைப்பும், எண்ணிக்கைகளும் புதியனவாக இருக்க வேண்டும். பல பகுதிகளில் இருந்து வரும் புதிர்கள் பெரும்பாலும் ஒத்தே இருக்கின்றன. இனிமேல் தேர்ந்தெடுக்கும் ஒவ்வொரு சிறந்த புதிரையும் விடுக்கும் தம்பி தங்கைகட்குப் பரிசாகத் 'தமிழ்ச்சிட்டு' ஓராண்டுக்கு விடுக்கப்பெறும் - என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றோம்.

O எங்கள் விருப்பம் என்னவென்றால்
எந்தமிழ் மொழிக்கும் - எறும்புகள் போல்
இன்றமிழ் உண்ண ஊர்ந்துவரும்
இளைஞர் களுக்கும் விடுதலையே!
– இளவல் ப. அருண்மொழி, எட்டாம் நிலை, நாயனார்பாளையம்

O தமிழ்ச்சிட்டுகளே!

தமிழ்மொழியின் மங்கிய நிலையை அகற்றும் மாணிக்கச் சுடர்களாகத் திகழும் தென்மொழி, தமிழ்ச்சிட்டு இவற்றின் உயர் நோக்கம் புரியாமையால் சிலர் இவற்றையும் மற்ற பொத்தகங்கள் போலவே எண்ணுகின்றனர். அவர்கள் அறியாமையைப் போக்கவேண்டியது உங்களின் கடமையாகும். உயரிய பண்போடு கூடிய அன்பு மொழிகளால் அவர்களை மாற்றி, படிப்போடு பண்பும் பெற்று அவர்களையும் பகலவன் போல் விளங்கச் செய்யுங்கள்.

கல்லூரி மாணவர்களைப் பார்த்து, உயர்நிலைப் படிப்பைக் கூட முடிக்காத மாணவ மாணவியரும் அரசியலில் ஈடுபட்டுத் தங்களின் வாழ்க்கையைப் பாலையாக்கிக் கொள்வதைக் கண்ணுற்று மனம் வெதும்பினேன். கல்லூரி மாணவர்கள் உருவாக்கப்பட்டவர்கள். தங்கள் வாழ்க்கைப் பாதையைச் செப்பமாய் அமைத்துக் கொள்ளும் பக்குவம் பெற்றவர்கள். நீங்களோ அப் பக்குவம் பெறாதவர்கள். எனவே அரசியலை அறிந்து கொள்ளுங்கள். ஈடுபடாதீர்கள்.
– பொ. குப்புசாமி. முழுக்கு(அபிசேக)ப் பாக்கம், புதுவை-எ.

O கடந்த ஈராண்டுகளாக என்னால் ஒல்லும் வரை பன்னூறு மாணவர்கட்குத் தூய தமிழ்ப் பெயர்களைச் சூட்டியுள்ளேன். இவ் வகையில் நமக்கு (தலைமையாசிரியர்கட்கு) வாய்ப்பு மிகுதி. உங்கள் பள்ளிகளின் தம்பி, தங்கைகட்கும் நற்பெயர்கள் சூட்ட வேண்டுகின்றேன். அத்துடன் அலுவல் அஞ்சல் துறை, ஆவண பதிவு, பள்ளி நடைமுறை (அன்றாட வியக்கம்) அனைத்தையும் தூய தமிழில் இயங்கச் செய்வீராக!
– இரா. துளசியரசன், பள்ளித் தலைமையாசிரியர்,
உ. தொ. பள்ளி, நாயனார்பாளையம்.

மாணவர்க்கான மணி மொழிகள்

தமிழ்ச்சிட்டுகளே !

* உங்கள் ஒவ்வொருவரிடத்தும் ஒவ்வொரு திறமையோ ஆற்றலோ மறைந்து கிடக்கின்றது. அதனை மலரச் செய்வதே வாழ்க்கை என அறிந்துகொள்ளுங்கள்.

* ஒழுக்கம் உயிரினும் மேலானது. ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் தவறாமல் கடைப்பிடியுங்கள்.

* நூல் நிலையங்கட்குச் சென்று சிறந்த அறிவு நூல்களையும் நல்ல செய்தித்தாள்களையும் படிப்பதை வழக்கமாகக் கொள்ளுங்கள்.

* பெரியோர்களின் வாழ்க்கைக் கதைகளைப் படித்து அவர்களைப் போல் நீங்களும் சிறந்தவர்களாக முயற்சி செய்யுங்கள்.

* நல்லுணர்வையும் பண்பாட்டையும் கெடுக்கக்கூடிய திரைப்படங்களில் வீணாக மயங்கி உங்களையே கெடுத்துக் கொள்ளாதீர்கள்.

* எல்லா உயிர்களிடத்தும் அன்பாயிருங்கள். உங்கள் மகிழ்ச்சிக்காக அவற்றுக்கு ஊறு விளைவிக்காதீர்கள்.

* பிறருக்கு உங்களால் இயன்ற அளவு நன்மை செய்தல் வேண்டும் என்பதைக் கட்டாயமாகக் கொள்ளுங்கள்.

* உங்கள் பெற்றோரிடத்தும் பெரியோரிடத்தும் பணிவுடனும் இன்சொல்லுடனும் நடந்து கொள்ளுங்கள்.

* சோலைகளிலும் காடுகளிலும் திரிந்து இயற்கை அழகைச் சுவைப்பதிலும், இயற்கைப் பொருள்களோடு உறவாடுவதிலும் இன்பம் காணுங்கள்.

* இறுதியாக உங்கள் தாய்மொழியாகிய தமிழும், தாயகமாகிய தமிழகமும் இருவிழிகள் எனக்கொண்டு அவற்றுக்கு இயன்ற அளவு பணி புரியுங்கள்.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.